# சிங்கப்பூர் உதவியுடன் இந்தியாவின் ஊழியரணி மேம்பாட்டுத் திறன் பயிற்சித் திட்டம்

இந்தியாவின் ஊழியரணியின் திறனை மேம்படுத்துவதற்கு சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் இன்ஸ்டியூட் ஆஃப் சிஸ்டம் சயன்ஸுடன் இந்தியாவின் என்எஸ்டிசி என்றழைக்கப்படும் தேசிய திறன் மேம்பாட்டுத் துறை அந்நாட்டில் நடப்பிலுள்ள பயிற்சித் திட்டங்களை மேம்படுத்துவதுடன் புதிய பயிற்சித் திட்டங்களை உருவாக்க உள்ளது.

ஜூன் 2ஆம் தேதி சிங்கப்பூரில் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின்போது கையெழுத்திடப்பட்டது.

தரவு ஆய்வுகள், செயற்கை நுண்ணறிவு, எந்திரவியல் போன்ற தொழில்நுட்பத் துறைக்கான பயிற்சித் திட்டங்களை மேம்படுத்த இது உதவும். இந்தத் திட்டத்தில் அங்குள்ள பயிற்றுவிப்பாளர்களை தக்க பயிற்சியளித்து வாழ்நாள் கற்றலை ஊக்குவிப்பது போன்றவை அடங்கும். இதன்மூலம் உருவாக்கப்படும் பல திட்டங்களின் வழி அடுத்த மூன்றாண்டுகளில் 25 மில்லியனுக்கும் அதிகமான இளையர்களுக்கு திறன் பயிற்சியுடன் சான்றிதழ் அளிக்கப்படும் என்று இந்தியாவின் தேசிய திறன் மேம்பாட்டுத் துறையின் இயக்குநர் மனிஷ் குமார் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.